பயணத்தின் நாட்கள்

# கருவி நிறுவனத்தின்

10 ஆண்டு காலச் சமூகப்பணி

ஆவணத் தொகுப்பு

# சிறப்பு மலர்

யூன் 12 - 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்
KARUVI Centre for Social Resource of Differently Abled

| | | |
|---|---|---|
| | முகவரி | இல:290, பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி, யாழ்ப்பாணம், இலங்கை. |
| | Address | No:290, Point Pedro Road, Neerveli South, Neerveli, Jaffna, Srilanka |
| | நிரந்தர முகவரி | பூதர்மடம் ஒழுங்கை, நீர்வேலி தெற்கு, நீர்வேலி |
| | Permanent Address | Pootharmadam Lane, Neerveli South, Neervely |
| | தொலைபேசி (T.P) | 021 205 4224 |
| | கைபேசி (Mobile) | 077 324 6876 |
| | மின்னஞ்சல் \| E-mail | Karuvi.org@gmail.com |
| | இணையம் \| Website | www.karuvi.org |
| | முகநூல் \| facebook | Karuvi Differently Abled (கருவி நிறுவனம்) |
| | Viber \| WhatsApp | 0094 773 246 876 |

| | |
|---|---|
| தூரநோக்கு | மாற்றுத்திறனாளிகளை சமூக விருத்தியின் ஆரோக்கியமான பங்காளர்களாக மாற்றுதல். |
| Vision | converting differently Abled as healthy contributors in the social development |
| தொலை நோக்கு: | மாற்றுத்திறனாளிகளை சமூக விருத்தியின் ஆரோக்கியமான பங்காளர்களாக மாற்றுவதன் மூலம் பயனுறுதியுள்ள சமூக அபிவிருத்தியை சாத்தியமாக்குதல். |
| Mission | conforming sustainable social development through converting differently Abled as healthy contributors. |

| | | | | |
|---|---|---|---|---|
| வங்கிக் கணக்கிலக்கம் | | **Bank Account Number** | | |
| **BOC** | இலங்கை வங்கி | 82508256 | நடைமுறைக் கணக்கு | **Swift Code BCEYLKLX** |
| | Bank Of Ceylon | | Current A/C | |
| பெயர் | | **Karuvi Centre for Social Resource of Differently Abled** | | |
| Name | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தின் நாட்கள்...

## கருவி நிறுவனத்தின்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## ஆவணத்தொகுப்பு சிறப்பு மலர்

## யூன் 12 - 2023

## அர்ப்பணம்

கருவி நிறுவனத்தோடு அன்பு பூண்டு ஒழுகி
சமூகப்பணிகளை முன்னெடுப்பதற்குத் துணை செய்த,
துணை செய்துகொண்டிருக்கின்ற அனைத்து வளவாளர்களுக்கும்
இந்நூலை அர்ப்பணம் செய்கின்றோம்.

1127(P)
PL (Arc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தின்

## கருவி நிறுவனத்தின் 10 ஆண்டு கால சமூகப்பணி ஆவணத்தொகுப்பு - சிறப்பு மலர்


வெளியீடு – கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்

பதிப்புரிமை – கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்

பதிப்பு – 12.6.2023

மலராசிரியர் – திரு.கனகலிங்கம் தர்மசேகரம் (தலைவர், கருவி நிறுவனம்)



துணை ஆசிரியர் – திரு.நாகராசா கீதா கிருஷ்ணன் (உபசெயலாளர், கருவி நிறுவனம்)



68

பக்கங்கள் –

அன்பளிப்பு – ரூபா. 1000/-

கணனி பதிப்பு – திருமதி ஹேதினி லுசிந்தன் (நிர்வாக உத்தியோகத்தர்– கருவி நிறுவனம்)

அச்சுப் பதிப்பு – New Evergreen Printres (Pvt)Ltd., Jaffna.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி நிர்வாகசபை - 2023


தலைவர்
திரு. கனகலிங்கம் தர்மசேகரம்


செயலாளர்
திரு. துரைராசா யசிந்தன்


பொருளாளர்
திரு. யேசுதாசன் கொன்கிளேடியஸ்


உப தலைவர்
திரு. திருநாவுக்கரசு திருமாறன்


உப செயலாளர்
திரு. நாகராசா கீதாகிருஷ்ணன்


நிர்வாகசபை உறுப்பினர்
திரு. கணபதிப்பிள்ளை சர்வானந்தா


நிர்வாகசபை உறுப்பினர்
திரு. இரத்தினம் கந்தராசா


நிர்வாகசபை உறுப்பினர்
திரு. வரதராசா சசிக்குமார்


திரு.கிருஸ்ணசாமி ஐங்கரன்
நலச்சேவை இணைப்பாளர்
கருவி நிறுவனம்


திரு. கனகலிங்கம் சோமசேகரம்
பொறிமுறை எந்திரவியல் தொழில்நுட்ப ஆலோசகர்
கருவி நிறுவனம்


திரு. சிவா ஜி சேகரம்
அறங்காவலர்சபை இணைச்செயலாளர்
KARUVI (SRDA)-UK


திரு. இ. சிவகுமாரன்
அறங்காவலர்சபை இணைச்செயலாளர்
KARUVI (SRDA)-UK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்
## KARUVI CENTRE FOR SOCIAL RESOURCE OF DIFFERENTLY ABLED

உலகில் பயணங்கள்தான் புதிய நாடுகளையும் வேறுபட்ட அம்சங்களையும் கண்டடைவதற்கு மனிதர்களுக்கு உதவியிருக்கின்றன. அந்த வகையில், சமூகப்பணிப் பரப்பில் கருவி நிறுவனத்தின் வகிபாகமும் ஒரு பயணமாக அமைகின்றது. 12.6.2013 தொடக்கம் 11.6.2023 வரையான தசாப்த காலத்தில் எமது சமூகத்தில் கருவி நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் வலுவிழப்புடன்கூடிய நபர்களுக்கான சேவை வழங்குதலில் நிறுவனத்தின் பங்கு மற்றும் நிறுவனம் சார்ந்த விபரங்கள் அனைத்தையும் தாங்கி "பயணத்தின் நாட்கள்" என்ற இந்தச் சிறப்பு மலர் வெளிவருகின்றது.

"பயணத்தின் நாட்கள்" என்ற நூல், கருவி நிறுவனம் சார்ந்த புரிதலை உலகவாழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் ஓர் ஆவணமாக விளங்கும் என நாம் நம்புகின்றோம். கருவிகளின் உருவாக்கமே உலகில் பல மாறுதல்களைத் தந்தன. அவ்வண்ணமே கருவியின் தோற்றமும் சமூகப்பணித் தளத்தில் புதிய தரிசனங்களைத் தந்தது. சேவை பெறுநர்களையும் சேவை வழங்குநர்களையும் இணைப்புச் செய்கின்ற ஓர் பாலமாகவும் நேர்மயமான சிந்தனைகளோடு சமூகப்பணிகளை ஆற்றுவதற்கான ஓர் தளமாகவும் கருவி நிறுவனம் தனது பணி வடிவமைப்பை நிலை நிறுத்தியிருக்கின்றது. இவை சார்ந்த சான்றுகளை பயணத்தின் நாட்கள் பொதுமக்களுக்குத் தருகின்றது. நீங்களும் இந்த நூல் வாயிலாகப் பயணித்து கருவி நிறுவனத்தின் பணிகளைப் புரிந்து கொண்டு ஆதரவு நல்க வேண்டுமென தங்களை வினயமாக வேண்டுகின்றோம்.

**மலராசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தின் நாட்களின் உள்ளே... ✍


**இயல் - 01**

✍ யாழ்.மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

✍ **KARUVI (SRDA)-UK** அறங்காவலர்சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

✍ **ATC-1985** கரங்களின் வாழ்த்துச் செய்தி

**இயல் - 02**

✍ பயணத்தின் நாட்கள் – தலைவர், கருவி நிறுவனம்

✍ பத்தாண்டுச் செயற்பாட்டு அறிக்கை– செயலாளர், கருவி நிறுவனம்

✍ பத்தாண்டு கணக்கறிக்கை– பொருளாளர், கருவி நிறுவனம்

✍ கருவியின் அலகுகள் – நிர்வாக உறுப்பினர், கருவி நிறுவனம்

**இயல் - 03**

✍ கருவி சமூகம்–2023

  * நிழற்படங்கள்

**இயல் - 04**

✍ கொடையுள்ளம் பேசுகின்றது

✍ என்றும் கருவி வாழும்

✍. கருவியின் கருவியாய்

**இயல் 05**

✍ கருவி நிகழ்வுகளின் நிழல் தசாப்தம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 1

- யாழ். மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி
- KARUVI (SRDA) - UK அறங்காவலர் சபைத்தலைவரின் வாழ்த்துச் செய்தி
- ATC - 1985 கரங்களின் வாழ்த்துச் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - යාපනය
DISTRICT SECRETARIAT – JAFFNA



## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையமாக விளங்கும் “கருவி” நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகளின் நிறைவை முன்னிட்டு மலரும் “பயணத்தின் நாட்கள்” என்னும் ஆவணத் தொகுப்பு மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்வடைகின்றேன்.

மலரும் “பயணத்தின் நாட்கள்” ஆவணத் தொகுப்பு மாற்றுத் திறனாளிகளின் ஆற்றல்களையும் அவர்களுக்கு சமூகத்தில் கிடைத்திருக்கும் அங்கீகாரத்தினை எடுத்துக்கூறும் வகையில் அமைவது பெருமைக்குரியது.

மாற்றுத்திறனாளிகளை சமூக விருத்தியில் ஆரோக்கியமான பங்காளர்களாக மாற்றுதலை நோக்காகக் கொண்டு பணியாற்றிவரும் “கருவி” நிறுவனம் மாற்றுத்திறனாளிகளை அவர்களின் வாழ்வியலில் கல்வி, கலை, கலாசார, சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு ரீதியில் விருத்தியடையச் செய்து அவர்களை உயர்நிலைக்கு கொண்டு வருவதனை இலக்காகக் கொண்டு பணியாற்றி வருவது மேலும் சிறப்பாக குறிப்பிட முடியும்.

“கருவி” மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தால் முன்னெடுக் கப்படும் அனைத்துப் பணிகளுக்கும் எம் அனைவரது ஒத்துழைப்பும் பங்களிப்பும் அவசியம் எனக் குறிப்பிட்டு பத்து ஆண்டுகளில் “பயணத்தின் நாட்கள்” என்னும் ஆவணத்தொகுப்பு சிறப்புடன் வெளிவர உழைத்துக் கொண்டிருக்கும் அனைவரையும் பாராட்டி மலரும் “பயணத்தின் நாட்கள்” ஆவணத்தொகுப்பு சிறப்புடன் வெளிவர என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி

**அம்பலவாணர் சிவபாலசுந்தரன்.**
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# KARUVI (SRDA) - UK

**PURELY COMMITTED TO DISABLED COMMUNITIES**


REGISTERED CHARITY No.1186652 (UK)
48 Beechmount Avenue, Hanwell, London W7 3AG
Tel. 020 8813 2390 Email: karuvisrdauk@gmail.com



**Board of Trustees**
Mr. S Segaram
07448 697916

Mr. R Sivakumaran
07476 876516

Mr. K Kajaneshan
07988 264727

Mr. N Sathananthan
07808 587790

Mr. N Rajhbawan
07833 460145

Mrs. V Segaram
07405 335527

**Select Committee**
Chairman
Mr.K Manikavasagar

General Secretary
Mrs. V Segaram

Treasurer
Mr. K Kajaneshan

Vice Chairman
Mr. S Sureshkumar

Joint Secretary
Mr. R Sivakumaran

Assistant Treasurer
Mr. N Rajhbawan

Includes
Mr. K Sithivinayagar


## Mr.Siva G Segaram -Trustee Chairman (KARUVI (SRDA)-UK

## அறங்காவலர் சபைத் தலைவர் திரு.சிவா ஜி சேகரம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

### வாழ்த்துவோம் பணி செய்வோம்

கருவி நிறுவனம் 10வது ஆண்டை நிறைவு செய்து 11வது ஆண்டில் தடம் பதிப்பது எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தருகின்றது. சமூகப் பணி வரலாற்றில் காத்திரமான பங்களிப்புக்களை இலங்கையில் குறிப்பாக தமிழ் பிரதேசங்களில் கருவி நிறுவனம் ஆற்றி வருகின்றது.

வலுவிழப்புடன் கூடிய நபர்களுக்கான சேவை வழங்குதலில் கருவி நிறுவனம் காத்திரமான வகிபாகத்தை கொண்டிருக்கின்றது. வலுவிழந்த நபர்களை அனைத்து விதத்திலும் மேம்படுத்தும் வகையிலான செயற்றிட்டங்களை கருவி நிறுவனம் வகுத்து செயற்படுத்தி வருவது சிறப்பான ஓர் அம்சமாகும்.

ஐக்கிய இராச்சியத்தில் வாழ்கின்ற உறவுகளின் பங்களிப்போடு கருவி நிறுவனத்திற்கான பங்களிப்புக்களை KARUVI (SRDA)-UK ஊடாக நாம் வழங்கி வருகின்றோம். குறித்த பணியில் இணைந்து கொண்டிருக்கின்ற அனைத்து நல்லுள்ளங்களையும் இத்தருணத்தில் நாம் நன்றி பாராட்டுகின்றோம்.

கருவி நிறுவனம் தொடர்ந்தும் உத்வேகத்தோடு பணிகளை ஆற்றுவதற்கு இறையாசி வேண்டுவதோடு வாழ்த்துக் களையும் KARUVI (SRDA)-UK சார்பாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

திரு. சிவா ஜி சேகரம்
அறங்காவலர் சபைத் தலைவர்
கருவி யு.கே.
Railway Eng Consultant-UK


**Bank Details**
KARUVI (SRDA)-UK
Sort Code 30-90-89
Ac No. 56987860
Llovds Bank PLC




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

இயற்கையினாலும் விபத்துக்களாலும் யுத்த அனர்த்தங்களினாலும் அங்கங்களை இழந்த எமது சமூக மாந்தர்களுக்கான சேவைகளை கருவி நிறுவனம் வழங்கி வருகின்றது. இந்த நிறுவனம் கடந்த பத்து ஆண்டு காலமாக அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றது. பத்தாவது ஆண்டினை நிறைவாக்கி பதினொராவது ஆண்டில் கால் பதித்து, சமூகப் பணிகளை முனைப்புடன் முன்னெடுத்து வருகின்ற கருவி நிறுவனத்தை வாழ்த்துவதில் ATC-1985 கரங்களாகிய நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

இணுவில் கிராமத்தில் இரா.அருட்செல்வம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ATC கல்வி நிறுவகம் மாணவர்களுக்கான கல்விப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த நிறுவனத்தில் 1985 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் பயின்ற மாணவர்களாகிய நாம் ஒன்றிணைந்து ATC-1985 கரங்கள் என்ற அமைப்பை உருவாக்கியிருக்கின்றோம். இவ்வமைப்பின் ஊடாக கருவி நிறுவனத்தின் பயனாளிகளுக்கான பணிகளை முன்னெடுக்கக் கிடைத்தமையைப் பெரும் பேறாகக் கருதுகின்றோம். உலகெலாம் பரந்து வாழும் ATC-1985 கரங்கள் கருவியை என்றும் பலப்படுத்தும். நாமும் கருவியின் கருவிகளாய் என்றும் இருந்து இறை பணிக்கு நிகரான சமூகப்பணிகளை ஆற்றுவோம்.

கருவி நிறுவனம் பயனாளிகளுக்கான தற்காலிகமான வசதிப்படுத்தல் களையும் நிரந்தர வாழ்வாதார விருத்திக்கான பணிகளையும் முன்னெடுத்து வருகின்றது. "கல்வியின் பயன் கடமைகளைக் கருத்துடன் ஆற்றுவதே யாம்." ATC கல்வி நிறுவகம் எமக்கு ஏட்டுக்கல்வியை மட்டும் தரவில்லை. சமூகத்தை நேசிக்கும் பண்பையும் சேர்த்தே ஊட்டியிருக்கின்றது. ATC நிறுவகத்தின் நிறுவுநர் இரா. அருட்செல்வம் ஆசிரியர் அவர்கள் என்றென்றும் எமது நன்றிக்கும் அன்புக்கும் பாத்திரமானவர். அவரது சிந்தனையின் வீச்சே எம்மை சமூகப் பணிகளின்பால் வழிப்படுத்தியதென்றால் அது மிகையாகாது.

கருவி நிறுவனம் தசாப்தங்கள் தாண்டி தரணியில் நிகரில்லா சேவைகளை வழங்க இறை ஆசியை வேண்டுகின்றோம்.

நன்றி

ATC-1985 **கரங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 2

- பயணத்தின் நாட்கள் - தலைவர், கருவி நிறுவனம்
- பத்தாண்டுச் செயற்பாட்டு அறிக்கை - செயலாளர், கருவி நிறுவனம்
- பத்தாண்டு கணக்கறிக்கை - பொருளாளர் கருவி நிறுவனம்
- கருவியின் அலகுகள் - நிர்வாக உறுப்பினர் கருவி நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்
## KARUVI CENTRE FOR SOCIAL RESOURCE OF DIFFERENTLY ABLED

## பயணத்தின் நாட்கள்...



**திரு.க.தர்மசேகரம்**
தலைவர்,
கருவி நிறுவனம்.

இந்த விடியலும் தள்ளிப்போய்விடக் கூடாது என்ற தீர்மானத்தோடு படுக்கையைவிட்டு எழுந்து கொள்கின்றேன். குளிரும் இல்லாமல் வெம்மையும் இல்லாமல் இருக்கின்ற ஒரு இனிமையான சீதோசன நிலையை பிரசவித்திருக்கின்ற ஒரு காலைப் பொழுது. ஜீவராசிகள் தத்தம் கடமைகளுக்காக துயில் கலைக்கின்ற நேரத்தில் நானும் என் கடமைக்காய் தயாராகின்றேன்.

காலவெளியில் கடந்த 10 ஆண்டுகாலம் கனதியானதும் கடின உழைப்பின் பாற்பட்டதுமாய் இருப்பதை நினைக்கின்ற போது பிரமிப்பும் மனநிறைவும் இயல்பாகவே மனதினுள் ஏற்படுகின்றது. பயணத்தின் நாட்கள் என்கிற இந்தக்குறிப்பை எழுதுகின்ற போது இயல்பாகவே சொந்த வாழ்வியலின் 10 ஆண்டு காலமும் பிணைப்புற்றுப் பதிவாவது தவிர்க்க முடியாததாகின்றது. வாழ்வியலில் இருந்து பிரித்துப்பார்க்க முடியாத ஓர் அங்கமாக கருவி நிறுவனம் இருக்கின்றது.

நான் என்கின்ற தன்முனைப்புச்சார்ந்த உணர்வைத்தொலைத்து நாம் என்கின்ற கூட்டுணர்வுக்கு என்னைப் பழக்கப்படுத்திக் கொள்வதற்கு கடந்த இந்தத் தசாப்தம் எனக்கு உதவியிருக்கிறது.

கருவி என்கின்ற இந்த விருட்சம் நடுகை செய்யப்பட்டு 12.06.2023 உடன் 10 ஆண்டுகள் நிறைவாகின்றன. வளங்கள் அற்றதான, எள்ளி நகையாடல்கள் நிறைந்த, எதிர்மறையான எண்ணப்பரிமாறல்கள் கிடைத்த ஒரு காலப்பகுதியாகத்தான் கருவி நிறுவனத்தின் ஆரம்பகால முன்னெடுப்புக் காலப்பகுதி அமைந்தது என்பதை இந்த இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியாக வேண்டியிருக்கின்றது. வலுவிழப்புடன் கூடிய நபர்களின் நிரந்தரமான வாழ்வாதார விருத்தி என்பதும் அதனூடான சமூக மேம்பாடு என்பதும் வெறுமனே கருத்தியல் ரீதியானதே அன்றி நடைமுறை சாத்தியமாகாததொன்று என்ற வரட்டுச் சித்தாந்தத்தை சிலர் எம்முள் வலிந்து விதைக்க முற்பட்டனர். பல சமூகப்பணி நிறுவனங்கள் இருக்கிற போது புதிதாய் இன்னோர் நிறுவனம் எதற்கு? உங்களால் வளங்களை ஈட்டி நிறுவனத்தை ஸ்தாபித்து பரிபாலிக்க முடியுமா? தற்காலிகமான வசதிப்படுத்தல்களோடு மட்டும் திருப்தியுறுகின்ற எங்கள் சமூகத்தில் நிரந்தரமான சமூக அபிவிருத்தி சார்ந்த செயல் முனைப்புக்களை சாத்திய மாக்க முடியுமா? போன்ற கேள்விகள் எம்முன் தொடுக்கப்பட்டன. இப்படியான கேள்விகளுக்கு கருவி நிறுவனத்தின் உருவாக்கமும் பணி முன்னெடுப்புக்கள் உடனான செயற்பாடுகளும் பதிலாய் அமைந்திருப்பதாக நாம் உணர்கின்றோம்.

பயணத்தின் நாட்களை எழுதுகிற போது மனம் இயல்பாகவே ஆனந்திக் கின்றது. ஒரு சமூக இயக்கத்தின் நடுகல்லாய் கருவி நிறுவனம் ஊன்றப் பட்டதன் பயனுறுதியுள்ள விளைவை சமூகம் இன்று தரிசிக்கத் தொடங்கி இருப்பதாக நாம் உணர்கின்றோம்.

✓ **மையப்புள்ளி**

கருவி நிறுவனத்தின் உருவாக்கம் என்பது காலத்தால் தவிர்க்க முடியாதபடி விதிக்கப்பட்ட விதைக்கப்பட்ட ஒன்று. சமூகப்பணிகள் தொடர்பான அர்ப்பணிப் போடும் ஈடுபாட்டோடும் இருந்தவர்களைக் கூட்டிணைத்து எடுக்கப்பட்ட ஓர் முயற்சி. சமூகப்பணிப்பரப்பில் புதிய பார்வை விசாலிப்புக்களைத் திறந்துவிட்ட நிறைவு கருவி நிறுவனத்திற்கு உண்டு. தங்கி வாழ்கின்ற மனப்பாங்குத் தளத்தை மாற்றி பிறரையும் தாங்கி வாழ்கின்ற எண்ணக்கரு உருவாக்கத்தை சமூக மாந்தர்களின் மனங்களில் கருக்கொள்ள வைத்து ஆரோக்கியமான மாற்றங்களை சாத்திய மாக்குவதற்கான காத்திரமான பங்களிப் புக்களை கடந்த 10 ஆண்டு காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பணிகளின் ஊடாக கருவிநிறுவனம் செயல் நிலைப்படுத்தி இருக்கின்றது.

கருவி நிறுவனத்தின் உருவாக்கக் காலப்பகுதியிலும் சரி பணிமுன்னெடுப்புக் களின் போதும் சரி ஏன்? எதற்கு? என்கின்ற கேள்விகளே அடிநாதமாய் அமைந்திருந்து வலுவூட்டின.

சமூகப்பணித்தளத்தில் புதிய நோக்கோடு பாதைவகுத்து பயணிக்க முடியும் என்பதனை கருவி நிறுவனத்தின் இந்தப் பத்தாண்டு காலப்பயணம் உணர்த்தி நிற்கின்றது. கருவி நிறுவனத்தின் செயற் திட்டங்கள் ஒவ்வொன்றும் ஆழ்மனப் படுக்கையிலிருந்து துயில் கலைக்கப் பட்டு செயல்நிலைப்படுத்தப்பட்டவை. ஒவ்வொன்றும் உயிரோட்டமானவை உணர்வுத்தளத்தாலும் அறிவுத்தளத்தாலும் புடம் போடப்பட்டு வடிவமைக்கப்பட்டவை. இந்தப்பயணத்தின் நாட்களில் கூடவே கைகோர்த்து நடந்த நடக்கின்ற உறவுகளை நாம் நன்றியோடு இந்தத் தருணத்தில் நெஞ்சிருத்திக் கொள்கின்றோம்.

12.06.2013ஆம் ஆண்டு புதன்கிழமை சதுர்த்தி நன்நாளன்று கருவி நிறுவனத்தின் 1ஆவது உத்தியோகபூர்வ உருவாக்கக் கூட்டம் இல90, செங்குந்தா வீதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இடம்பெற்றது. புதுவெள்ளப் பிரவாகத்தின் மகிழ்ச்சியும் திருப்தியும் பங்குபற்றியவர் களின் மனங்களில் குடிகொண்டிருந்த தருணமாக அந்தப் பொழுது அமைந்தது. வலுவிழப் புடன் கூடிய நபர்களுக்கும் இந்த சமூகத்திற்கும் பயனுள்ள எதையாவது செய்யவேண்டும் என்ற ஆர்வமும் துடிப்பும் எல்லோரிடமும் இருந்தது. அந்த உணர்வுத் தொற்றல் இன்று வரை இருப்பதே கருவி நிறுவனத்தின் வெற்றிக்கு உறுதுணையாய் அமைந்திருக்கின்றது.



வேறுபட்ட சந்தர்ப்பங்களில் சமூகப் பணியாற்றுவதற்கு தலைப்பட்டு பொருத்தமான நிறுவனச் சூழல் வாய்க்கப் பெறாதவர்களின் ஏக்கத் தொனிப்புக்களும் கருவி நிறுவனத்தின் உருவாக்க மையப் புள்ளிகளில் ஒன்றாய் அமைந்திருந்தது என்பதையும் இங்கு வெளிப்படுத்தியாக வேண்டியிருக்கின்றது. சமூகப்பணிப் பரப்பில் நிறைவாக்கப்பட வேண்டியிருக் கின்றதென உணர்கின்ற விடயங்களை நடைமுறைச் சாத்தியமாக்கின்ற தளம் ஆகவும் கருவி நிறுவனத்தை நாம் காண முடியும்.

### ✓ கட்டமைப்பு முறைமை

கருவி நிறுவனம் பதினொரு பேரைக் கொண்ட நிர்வாக சபையால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. பொதுச் சபை, வளவாளர் சபை, காப்பாளர்சபை ஆகிய சபைகள் உண்டு. பதவி வழியாக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் போசகராக இருந்து நிறுவனப் பணிகளை முறை செய்வார். பொதுச்சபையில் இருந்தும் வளவாளர் சபையிலிருந்தும் நிர்வாக சபைக்கு சமூகப்பணியாளர்கள் தேர்வு செய்யப்படுவார். பத்து ஆண்டு காலத்திற்கு ஒரு தடவை புதிய நிர்வாக சபை நிறுவனத்தைப் பொறுப்பேற்க்கும். இவ்வாறான முறைமைக் கட்டமைப் பினூடாகவே கருவி நிறுவனத்தின் இயங்கியல் செல்நெறி அமைகின்றது.

### ✓ தனித்துவ அடையாளங்கள்

கருவி நிறுவனத்தின் உருவாக்கமே சமூகப்பணிப் பாரம்பரியத்தில் ஒரு புதிய வீச்சை வழங்க வேண்டும் என்பதாக இருந்தது. சமூகப்பணி நிறுவனங்கள் கொண்டிருக்க வேண்டிய ஒழுக்க விழுமியங்களையும் நடைமுறைகளையும் கட்டுக் கோப்போடு பின்பற்றுவது என்ற தீர்மானமும் செயல் முனைப்புமே இதுநாள் வரையான கருவி நிறுவனத்தின் பயணத்திற்கு உறுதுணை செய்திருக் கின்றன என நாம் திடமாக நம்புகின்றோம். பொறுப்புக்களைக் கையளித்தலும் அதனூ டாக வினைத்திறனான சேவைகளை வழங்குதலும் கருவி நிறுவனத்தின் பணி நிலைக் கண்கள் என நாம் சொல்லலாம். செயற்றிட்டங்களை அலகுகள் ஊடாக திட்ட முகாமையாளர்களின் தலையீட் டோடும் ஆளணிப் பங்களிப்போடும் முன்னெடுப்பது கருவி நிறுவனத்தின் பணி முன்னெடுப்புக்களைப் பெரிதும் இலகுவாக்கியிருக்கின்றது எனக் கொள்ளலாம். ஆரம்பம் முதற்கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவன மயமாக்கல் சார்ந்த செயற் பாடுகள் நிறுவனத்தால் பின்பற்றப்பட்டு வருகின்றன. யூன் 12. 2013 அன்றே அலுவலகமும் பணியாள் தொகுதியும் தேர்வு செய்யப்பட்டது. இதில் குறிப்பிட வேண்டிய விடயம் யாதெனில் அலுவலக வாடகையின்மையோ பணியாள் தொகுதிக்கான ஊதியத்தினையோ வழங்குவதற்கான எந்தவித நிதி மூலங்களும் அப்போது இருக்கவில்லை. ஆனாலும் சாத்தியமாக்க முடியும் என்கிற நம்பிக்கை மட்டும் தான் நமது மனதில் இருந்தது. வழக்கமாக பொதுப்பணி நிறுவனங்கள் மேற்கொள் கின்ற நிதி சேகரிப்பு முறைமைகள் கருவி நிறுனத்தின் நிதிசேகரிப்பு முயற்சிகளுக்கும் உதவியிருக்கின்றன. நன்கொடையாளர்கள் கருவி விருட்சத்தின் கனதியை கண்டுணர்ந்ததன் பயனாய் கருவி நிறுவனம் இன்று நிரந்தரமான காணி களைப் பெற்றிருக்கின்றது. நிறுவனத்தை நிரந்தரமாக நிறுவு வதற்கான அத்திவாரம் இடப்பட்டிருக்கின்றது. 2014ஆம் ஆண்டு தை மாதம் 16ஆம் திகதி முதல் கருவி நிறுவனம் தனது அலுவலகப் பணிகளை இலக்கம் 1166/15, அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்ந்து முன்னெடுத்து 2020ஆம் ஆண்டு வைகாசி மாதம் 6ஆம் திகதி முதல் இலக்கம் 290, பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலியில் தற்காலிக அலுவலகத்தை அமைத்து செயற்பட்டுவருகின்றது.


# கொடித்திங்கள்
## 2018
( ஆகஸ்ட் 16 - ஒக்டோபர் 15 )

**மாற்றுத்திறனாளிகளை சமூக விருத்தியின் ஆரோக்கியமான பங்காளர்களாக மாற்றுதல்.**

**மாற்றுத்திறனாளிகளை சமூக விருத்தியின் ஆரோக்கியமான பங்காளர்களாக மாற்றுவதன் மூலம் நிலையான சமூக அபிவிருத்தியை சாத்தியமாக்குதல்.**

ரூபா
**10.00**

**கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்**
இல: 1166/15, அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
Tel: 021 205 4224, 0773246876 Email: Karuvi.org@gmail.com
Website: www.karuvi.org Fb:karuvi.org


✓ **காணி நிலம் வேண்டும்**

அலுவலக இடமாற்றங்கள் என்பது நிறுவனத்தின் ஸ்திரத் தன்மைக்கு பாதிப்பாக அமையும் என்பது உணரப் பட்டதன் விளைவாய் நிரந்தரமான இடத்தில் கருவி நிறுவனத்தை நிறுவுவதற்கான எத்தனிப்புக்கள் ஆரம்பம் முதற்கொண்டே இருந்தன. நிறுவன இயங்கு நிலை அங்கத்த வர்களுக்கான சேவை முன்னெடுப்புக்கள் காணி வாங்குவதற்கான முயற்சிகள் அனைத்துமே நிதிமூலங்களோடு தொடர்பு பட்டதாய் இருந்தமை சவால்மிகுந்ததாய் இருந்தாலும் கருமமே கண்ணாய் உழைப்பது என்கின்ற மனஓர்மம் அனைத்தையும் சாத்தியமாக்க முடியும் என்கின்ற பலத்தை எமக்குத் தந்தது. கருவி நிறுவனத்திற்கென வேறுபட்ட இடங்களில் காணி பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் இடம் பெற்றன. இறுதியாக நீர்வேலி பூதர்மடம் பகுதியில் 10 பரப்புக் காணியொன்று அடையாளப்படுத்தப்பட்டு. பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முயற்சியின் பொழுதும் காணிக் கொள்வனவிற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை நிதியொதுக்கம் பாரியளவில் இருக்கவில்லை. சமூகத்தின் அனைத்துத் தரப்பினரின் பங்களிப்போடும் காணியைக் கொள்வனவு செய்வது என்கின்ற முடிவுடன் திட்டம் வடிவமைக்கப்பட்டது. அதற்கமைய நன்கொடைச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டு பொதுமக்களின் இயலுமைக்கு ஏற்ற வகையில் நிதியீட்டத்தைப் பெற்றுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. மக்களும் தங்களது இயலுமைக்குட்பட்ட பங்களிப்புக்களை வழங்கி திட்டம் வெற்றி பெற வகை செய்தனர். இந்தச் செயற்பாடு இடம்பெற்றுக் கொண்டிருந்த போது நல்லூர் ஆலயச் சூழலில் திரு.திருமதி. இராசசிங்கம் இராசராணி தம்பதிகளை சந்திப்பதற்கு முருகப் பெருமானின் திருவருள் கைகூடியது. கருவி நிறுவனத்தின் நோக்கத்தை இராசசிங்கம் இராசராணி தம்பதிகள் உணர்ந்து தெல்லிப்பளையில் அமைந்துள்ள தமது 18 1/2ப் பரப்புக் காணியை கருவி நிறுவனத்திற்காய் 2017ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பன்னிரெண்டாம் திகதியன்று அர்ப்பணம் செய்தனர்.



குறித்த காணியிலும் கருவி நிறுவனத்தின் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிதிப் பேழைகளோடும் அச்சிடப்பட்ட சிட்டைகளோடும் வீதிகளிலும் பொது நிகழ்வுகளிலும் ஆலய விழாக்களிலும் நாம் பங்குபற்றி அலைந்ததன் விளைவும் நன்கொடையாளர்களின் பங்களிப்பும் நீர்வேலி பூதர்மடம் பகுதியில் நிறுவனத்திற்காய் ஏலவே அடையாளப் படுத்தப்பட்ட 10 பரப்புக்காணியை கொள்வனவு செய்யும் கருமத்தை 2019 புரட்டாதி மாதம் 30ஆம் திகதியன்று சாத்தியமாக்கியிருக்கிறது.



### ✓ வலிதான தோள்கள்

கருவி நிறுவனம் சமூகப்பணிப் பாரம்பரியத்தில் புதிய அத்தியாயங்களை திறந்துவிட்டிருக்கின்றது. பயணத்தின் நாட்கள் என்ற இந்த ஆவணத் தொகுப்பு நிறுவனத்தின் பணிகள் சார்ந்த விபரங்களை சமூகத்திற்கு வெளிப்படுத்துவதற்கான ஓர் பெட்டகமாய் அமையும் என நாம் நம்புகின்றோம். ஆத்மாத்தமாகவும் அர்ப்பணிப்போடும் கருவியைத் தாங்கக்கூடிய தோள்கள் தொடர்ந்தும் ஒன்றிணையட்டும்.

சோர்விலா மனத்தோடும் அர்ப்பணிப் போடும் தொடர்ந்தும் கருவி நிறுவனம் சார்ந்த பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். கருவி நிறுவனத்தின் பயண நாட்கள் இன்னமும் உண்டு. பயணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை பெற்றுக் கொண்டோர் தற்போது பயணத்தில் இணைந்து கொண்டிருப்போர் வருங்காலத்தில் இணையவிருப்போர் அனைவரையும் நாம் நன்றி பாராட்டு கின்றோம்.

கருவி நிறுவனம் என்பது ஒரு குழுமம் சார்ந்த முயற்சியன்று ஒரு சமூகம் சார்ந்த முயற்சி. கருவி ஒரு சமூக இயக்கம். வலுவிழப்புடன் கூடிய நபர்களுக்கான பணிகளைத் தாண்டி சமூகத்தின் தேவையுள்ள பக்கங்களினையும் ஸ்பரிசிப் பதற்கான ஒரு ஊடகம் என்கின்ற புரிதலோடு கருவியை நோக்கி நீங்கள் வாருங்கள். உங்கள் வலிமையான தோள்கள் கருவியைச் சுமக்கட்டும். கருவி நிறுவனத்தின் பணிகள் சமூகத்தில் சிறக்கட்டும். வளமான புது வாழ்வு உலகில் பிறக்கட்டும்.

**திருமுறுகண்டியில் நிதி சேகரிப்பின் போது...**




**நிதிப் பேழைகளோடும் அச்சிடப்பட்ட சிட்டைகளோடும் வீதிகளிலும் பொது நிகழ்வுகளிலும் ஆலய விழாக்களிலும் நாம் பங்குபற்றி அலைந்ததன் விளைவும்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்

## 10ஆண்டுச் செயற்பாட்டு அறிக்கை (12.6.2013-11.06.2023.)



**திரு.து.யசிந்தன்**
செயலாளர்,
கருவி நிறுவனம்.

### அறிமுகம்

மாற்றுத்திறனாளிகளின் சமூக பொருளாதார கலாசார விருத்திக்கான சேவைகளை வழங்குவதன் ஊடாக அவர்களை ஆரோக்கியமான சமூக அபிவிருத்தியின் பங்காளர்களாக மாற்றுதல் எனும் நோக்குடன் யூன் 12, 2013 இல் கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. வலுவிழப்புடன் கூடிய நபர்களின் சமூகப்பணி நிறுவனமாகிய கருவி நிறுவனத்தில் பார்வை, கேட்டல், பேச்சு போன்ற புலன்சார் குறைபாடுடையவர்களும் கை, கால் பாதிப்புற்ற உடலங்க குறைபாடுடையவர்களும் மனநலிவு, தற்சிந்தனை போன்ற உளசார் குறைபாடுடையோரும் அங்கத்தவர்களாக உள்ளனர். இவர்களின் கல்வி, கலை, கலாசார, வாழ்வாதார, தொழில் மேம்பாட்டிற்கான முன்னெடுப்புக்களையும் இத்தகையவர்களின் குடும்பநலன் தொடர்பான விடயங்களையும் முன்னிலைப்படுத்தியதாய் எமது பணிகள் அமைகின்றன. இன்று கருவி நிறுவனத்தில் 691 மாற்றுத்திறனாளிகள் அங்கத்தவர்களாக உள்ளனர். இவர்களும் இவர்களின் குடும்ப உறுப்பினர்களுமாக சுமார் 3500 பேருக்கு கருவி நிறுவனத்தினூடாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

2013ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட எமது நிறுவனம் பத்து ஆண்டுகளைத் தாண்டிய பயணத்தில் வலுவிழப்புடன் கூடிய நபர்களின் பல்துறைசார் நலன்களை மேம்படுத்துவதில் அளப் பெரிய பணியாற்றி வருகின்றது. இந்த வகையில் 12.06.2013-11.6.2023 வரையான காலப் பகுதியில் எமது நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் இங்கே தரப்படுகின்றன.

**மாதம் ஒரு பொதி :**

தொழில் செய்ய இயலா நிலையிலுள்ள அங்கத்தவர்களுக்கு இச்செயற்றிட்டத்தினூடாக மாதாந்தம் உலர்உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறித்த காலப்பகுதியில் 5558 உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வருடம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை | 25 | 107 | 200 | 235 | 500 | 898 | 904 | 1185 | 1192 | 312 |

**வாழ்வாதார உதவிகள் வழங்கல்:**

அங்கத்தவர்களின் வாழ்வாதார நிலையினை உயர்வடையச் செய்யும் நோக்குடன் அவர்களுக்கு பொருத்தமான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அங்கத்தவர்களின் கோரிக்கைக் கடிதங்கள் தேவை மதிப்பீட்டுக்குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு பயனாளிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். குறித்த காலப்பகுதியில் 85 பயனாளிகளுக்கு இச்செயற்றிட்டத்தினூடாக உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

| வருடம் | அங்கத்தவார்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவிகள் |
|---|---|---|
| 2015 | 6 | கால்நடைகள் |
| | 7 | சுயதொழில் உதவிகள் |
| | 7 | கடனுதவிகள் |
| 2016 | 1 | கால்நடை |
| | 1 | கடற்றொழில் உபகரணங்கள் |
| | 1 | பொருட்கள் கொண்டு சென்று விற்கும் வண்டி |
| | 1 | கடனுதவிகள் |
| 2017 | 1 | பலசரக்கு கடை நடாத்துவதற்குத் தேவையான பொருட்கள் |
| | 1 | சுயதொழில் உதவிகள் |
| | 10 | கால்நடைகள் |
| | 1 | கடனுதவிகள் |
| 2018 | 1 | பலசரக்கு கடை நடாத்துவதற்குத் தேவையான பொருட்கள் |
| | 1 | பொருட்களை கொண்டு சென்று விற்கும் பெட்டி |
| | 1 | சமையல் பாத்திரங்கள் |
| | 2 | கடனுதவிகள் |
| | 7 | தையல் இயந்திரங்கள் மற்றும் துணிகள் |
| 2019 | 3 | கால் நடைகள் |
| | 1 | பலசரக்கு கடை நடாத்துவதற்குத் தேவையான பொருட்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | 1 | முச்சக்கரவண்டி கொள்வனவிற்கான நிதி உதவி |
| | 1 | ஓர்கன் இசைக்கருவி |
| | 2 | கடனுதவிகள் |
| 2020 | 5 | வாழ்வாதார நிதியுதவிகள் |
| | 1 | தூள் திரிப்பதற்கான மூலப் பொருட்கள் |
| | 1 | முச்சக்கரவண்டி கொள்வனவிற்கான நிதி உதவி |
| | 1 | பழரசம் தயாரிப்பதற்கான உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்கள் |
| | 1 | கதிரை பின்னலுக்கான மூலப்பொருட்கள் |
| 2021 | 3 | கால்நடைகள் மற்றும் அதற்கான தீவனம் |
| | 1 | பலசரக்கு கடை நடாத்துவதற்குத் தேவையான பொருட்கள் |
| | 1 | கடனுதவிகள் |
| | 4 | வாழ்வாதாரத்திற்கான நிதியுதவி |
| | 1 | போட்டோக் கொப்பி இயந்திரம் |
| 2022 | 2 | கால் நடைகள் |
| | 4 | கடற்றொழில் உபகரணங்கள் |
| | 1 | வாழ்வாதாரத்திற்கான நிதியுதவி |
| | 1 | பலசரக்கு கடை நடாத்துவதற்குத் தேவையான பொருட்கள் |
| | 1 | கடனுதவிகள் |

**கல்வி உதவிகள்**

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் போன்றவற்றில் பயிலும் நிலையிலுள்ள அங்கத்தவர்கள் மற்றும் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு இத்திட்டத்தினூடாக உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறித்த காலப்பகுதியில் பல மாணவர்கள் இச்செயற்றிட்டத்தினூடாக நன்மை பெற்றுள்ளனர்.

| வருடம் | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவிகள் |
|---|---|---|
| 2014 | 30 | கற்றல் உபகரணங்கள் |
| | 1 | மடிக்கணனி |
| 2015 | 13 | மாதாந்த கல்வி நிதி |
| | 1 | பேசும் அகராதி |
| | 28 | கற்றல் உபகரணங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | 2 | துவிச்சக்கரவண்டி |
| 2016 | 12 | மாதாந்தம் கல்வி நிதி |
| | 50 | கற்றல் உபகரணங்கள் |
| | 1 | துவிச்சக்கரவண்டி |
| 2017 | 28 | மாதாந்தம் கல்வி நிதி |
| | 50 | சேமிப்பு கணக்குப் புத்தகங்கள் (இலங்கை வங்கி) |
| | 150 | கற்றல் உபகரணங்கள் |
| 2018 | 39 | மாதாந்த கல்வி நிதி |
| | 60 | கற்றல் உபகரணங்கள் |
| | 3 | துவிச்சக்கரவண்டி |
| 2019 | 25 | மாதாந்த கல்வி நிதி |
| | 145 | கற்றல் உபகரணங்கள் |
| | 1 | துவிச்சக்கரவண்டி |
| 2020 | 1 | துவிச்சக்கரவண்டி |
| | 20 | கற்றல் உபகரணங்கள் |
| 2021 | 13 | கற்றல் உபகரணங்கள் |
| | 1 | துவிச்சக்கரவண்டி |
| 2022 | 35 | துவிச்சக்கரவண்டி |
| | 25 | கற்றல் உபகரணங்கள் |
| 2023 | 14 | கற்றல் உபகரணங்கள் |

**அடிப்படை வசதிப்படுத்தல்கள் / சத்துணவுகள்**

கருவி நிறுவனம் அடிப்படை உதவிகள் தேவைப்படும் அங்கத்தவர்களுக்கு அவர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப வசதிப்படுத்தல்களினை வழங்கி வருகின்றது. இந்த வகையில் குறித்த காலப்பகுதியில் 448 வரையான வசதிப்படுத்தல்களினை அங்கத்தவர்களின் நலனுக்காக வழங்கியிருக்கின்றோம்.

| வருடம் | அங்கத்தவர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவிகள் |
|---|---|---|
| 2015 | 1 | கால்சத்திரசிகிச்சைக்கான உதவி |
| | 1 | மூக்குக் கண்ணாடி |
| | 25 | ஆடைகள் |
| 2016 | 1 | சக்கர நாற்காலி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | 1 | நீர் தாங்கி, அதனுடன் இணைந்த குழாய்கள் |
| 2017 | 31 | ஆடைகள் |
| | 10 | வெள்ளைப்பிரம்புகள் |
| | 2 | சக்கர நாற்காலிகள் |
| 2018 | 2 | சக்கர நாற்காலிகள் |
| | 10 | வெள்ளைப்பிரம்புகள் |
| | 30 | ஆடைகள் |
| 2019 | 5 | ஊன்றுகோல்கள் |
| | 65 | ஆடைகள் |
| | 50 | வெள்ளைப்பிரம்புகள் |
| | 30 | நுளம்புவலைகள் |
| | 1 | சக்கரநாற்காலி |
| 2020 | 2 | சக்கரநாற்காலிகள் |
| | 2 | குழாய்க்கிணறுகள் |
| | 1 | நீர்த்தாங்கி அதனுடன் இணைந்த உபகரணங்கள் |
| 2021 | 2 | சக்கரநாற்காலிகள் |
| | 8 | ஊன்றுகோல்கள் |
| | 63 | வெள்ளைப்பிரம்புகள் |
| | 1 | ஒரு தொகுதி பம்பஸ் |
| | 25 | மழைக்கவசங்கள் |
| | 2 | பேசும் கைக்கடிகாரங்கள் |
| | 25 | ஆடைகள் |
| | 1 | ஒரு வருடத்திற்கான பால்மாத் தொகுதிகள் |
| | 2 | மோட்டர், நீர்த்தாங்கியும் அதனுடன் இணைந்த உபகரணங்கள் |
| 2022 | 2 | சக்கர நாற்காலிகள் |
| | 4 | பால்மா பைக்கற்றுக்கள் |
| | 5 | வெள்ளைப்பிரம்புகள் |
| | 40 | ஆடைகள் |
| 2023 | 2 | சக்கர நாற்காலிகள் |
| | 1 | மருத்துவ நிதி உதவி |
| | 1 | கிளைச்சஸ் |
| | 25 | பால்மா பைக்கற்றுக்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயிற்சிகள், பயிலமர்வுகள்**

கருவி நிறுவனம் தொழில் செய்ய ஆர்வமுள்ள மற்றும் கணனி கற்க விரும்பும் அங்கத்தவர்களுக்கு பொருத்தமான பயிற்சிகளினை வழங்கி வருகின்றது. அத்துடன் உள நல விருத்திக்கான பயிற்சிகளினையும் பலதரப்பட்ட கருத்தரங்குகளினையும் நடாத்தி வருகின்றது. குறித்த பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் ஊடாக அங்கத்தவர்களின் வாழ்வியலினை எம்மால் ஆரோக்கியப்படுத்த முடிந்துள்ளது.

| வருடம் | அங்கத்தவர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட பயிற்சிகள் |
|---|---|---|
| 2014 | 20 | கணனிப் பயிற்சி |
| | 45 | மெழுகுதிரி தயாரித்தல், வாழையிலையில் உணவுத்தட்டுக்கள் தயாரித்தல். |
| 2015 | 20 | ஒரு நாள் பயிலமர்வு |
| | 60 | மனவளக்கலை யோகாப் பயிற்சி நெறி |
| 2016 | 225 | 10 நாள் பயிலமர்வுகள் |
| 2017 | 7 | தையல் பயிற்சி |
| | 10 | கடதாசிப்பை தயாரிப்புப் பயிற்சி |
| 2018 | 175 | 10 நாள் பயிலமர்வுகள் |
| 2019 | 2 | ஒருநாள் கருத்தரங்குகள் |
| | 50 | 3 நாள் பயிலமர்வுகள் |
| | 110 | 5 நாள் பயிலமர்வுகள் |
| 2020 | 60 | 5 நாள் பயிலமர்வுகள் |
| 2021 | 80 | 3 நாள் பயிலமர்வுகள் |

**விழாக்களும் நிகழ்வுகளும் :**

கருவி நிறுவனம் யூன் 12ஆம் திகதி ஆண்டுவிழாவினையும் டிசெம்பர் 3ஆம் திகதி மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வினையும் அனுஷ்டித்து வருகின்றது. இவை தவிர வாணிவிழா ஒளிவிழா, தைப்பொங்கல், வருடப்பிறப்பு போன்ற நிகழ்வுகளினையும் வெள்ளைப்பிரம்பு தினத்தினையும் கொண்டாடி வருகின்றது. இந்நிகழ்வுகளில் அங்கத்தவர்கள் கலந்து சிறப்பிக்கின்றனர்.

| வருடம் | நிகழ்வுகள் | நடைபெற்ற இடம் |
|---|---|---|
| 2013 | மாற்றுத்திறனாளிகள் தினம் | யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| | கருவியுடன் ஓர் சுவையிரவு | இராஜேஸ்வரி திருமண மண்டபம் கோண்டாவில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2014 | ஆண்டு விழா | கருவி நிறுவனம் |
| | மாற்றுத்திறனாளிகள் தினம் | கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபம் |
| 2015 | ஆண்டு விழா | கருவி நிறுவனம் |
| | மாற்றுத்திறனாளிகள் தினம் | கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, மாலதி சுப்ரமணிய அரங்கு |
| 2016 | ஆண்டு விழா | குருநகர் கலாச்சார மண்டபம் |
| | மாற்றுத்திறனாளிகள் தினம் | சரஸ்வதி மண்டபம் நாச்சிமார் கோவிலடி |
| 2017 | ஆண்டு விழா | நல்லூர் துர்க்கா மணி மண்டபம் |
| | மாற்றுத்திறனாளிகள் தினம் | நல்லூர் இளங்கலைஞர் மன்றம் |
| 2018 | ஆண்டு விழா | அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம் |
| | மாற்றுத்திறனாளிகள் தினம் | பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபம் |
| | புலவர் மு.பாலசுப்ரமணியம் அவர்களின் சிறுவர் “செந்தமிழ் பாடல்கள்” எனும் நூல் வெளியீட்டு விழா | நல்லூர் துர்க்கா மணி மண்டபம் |
| 2019 | ஆண்டு விழா | கருவி நிறுவனம் |
| | மாற்றுத்திறனாளிகள் தினம் | மானிப்பாய் பிரதேச சபை மண்டபம் |
| | ஓவியர் M.S சிவதாசன் அவர்களின் ஓவியக் கண்காட்சி | திருமறைக் கலாமன்ற கலைத்தூது மன்றம் |
| 2021 | ஆண்டு விழா | கருவி நிறுவனம் |
| | மாற்றுத்திறனாளிகள் தினம் | கருவி நிறுவனம் |
| 2022 | ஆண்டு விழா | கருவி நிறுவனம் |

**கருவியின் ஆற்றுகைகள்:**

கருவிக்கலைஞர்கள் “இராகஸ்ருதி” எனும் இசைக்குழுவினை ஸ்தாபித்து இசை ஆற்றுகைகளினையும் பட்டிமன்றக்குழு ஊடாக பட்டிமன்ற ஆற்றுகைகளினையும் பொது நிகழ்வுகள் தொலைக்காட்சிகள் என்பவற்றில் நிகழ்த்தி வருகின்றன. இதனூடாக கருவி அங்கத்தவர்களின் கலைத்திறமைகள் வெளிக்கொணரப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வருடம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பட்டிமன்ற ஆற்றுகை | 23 | 5 | 1 | 1 | 2 | 1 | 1 | - | - | - |
| இராகஸ்ருதி ஆற்றுகை | 4 | 2 | 3 | 1 | 1 | 1 | - | - | 1 | - |

✓ கருவி அங்கத்தவர்களின் கவிஅரங்கம் நிகழ்வு யாழ் வீரசிங்கம் மண்டபத்திலும் விழிப்புணர்வுத் தெரு நாடகம் நாவாந்துறை மற்றும் குருநகர்ப் பகுதிகளிலும் 2015ஆம் ஆண்டு இடம் பெற்றது.

**கௌரவிப்புக்கள்:**

✓ 2020 ஆம் ஆண்டு சமூகசேவை திணைக்களத்தினால் கருவி நிறுவனத்திற்கு சுவாபிமானி தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

✓ 2014ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட மெல்லிசைப்போட்டியில் கருவி நிறுவனம் மாவட்டம் மற்றும் தேசிய மட்டங்களில் முதல் இடத்தினையும், நாடகப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.

✓ 2014ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பாடல் போட்டியில் கருவி நிறுவனம் தேசிய மட்டத்தில் முதல் இடத்தினைப் பெற்றுள்ளது.

✓ இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் கருவி நிறுவனத்தை கௌரவித்திருந்தது.

✓ கருவி நிறுவனம் சிறப்பாக சேவையாற்றும் நபர்களைக் கௌரவித்து வருகின்றது. அத்துடன் மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவியப் போட்டிகளை கருவி நிறுவனம் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே நடாத்தி வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்து வருகின்றது.

**கண்காட்சிகள்:**

கருவி நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை ஆலய விழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகளின்போது காட்சிப்படுத்தி விற்பனை செய்து வருகின்றோம்.

| வருடம் | கண்காட்சிகள் | நடைபெற்ற இடம் |
|---|---|---|
| 2018 | சமூக செயற்பாட்டு அமைப்பினரின் மகளீர் நிகழ்வு | நல்லூர் சங்கிலியன் தோப்பு |
| | வர்த்தகக் கண்காட்சி | யாழ்ப்பாண முற்றவெளி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | நல்லூர் மகோற்சவம் | நல்லூர் |
| | வர்த்தகக் கண்காட்சி | திருகோணமலை |
| 2019 | வர்த்தகக் கண்காட்சி | மட்டக்களப்பு |
| | நல்லூர் மகோற்சவம் | நல்லூர் |
| | வர்த்தகக் கண்காட்சி | யாழ்ப்பாண முற்றவெளி |
| | வர்த்தகக் கண்காட்சி | யாழ் மத்திய கல்லூரி |
| | வர்த்தகக் கண்காட்சி | யாழ் வீரசிங்கம் மண்டபம் |
| 2023 | வர்த்தகக் கண்காட்சி | யாழ்ப்பாண முற்றவெளி |

**வலுச்சஞ்சிகை**

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும் நோக்குடன் வலு எனும் காலாண்டுச் சஞ்சிகையினை 2014 ஆம் ஆண்டு முதல் கருவி நிறுவனம் வெளியிடுகின்றது. இது வரை 35 சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன.

**கருவி Shine**

கருவி நிறுவனம் 2014 ஒக்டோபரில் இருந்து கருவி Shine என்ற பெயரில் திரவ சலவை சவர்க்காரத்தினை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகின்றது.

**காணி, வாகனம்**

கருவி நிறுவனத்திற்கு 2017.9.18 இல் தெல்லிப்பழை, தந்தை செல்வாபுரம், துரையப்பா வீதியிலுள்ள 18 ½ பரப்புக் காணியினை திரு. திருமதி இராசசிங்கம் இராசராணி தம்பதிகள் நன்கொடையாக வழங்கியுள்ளனர். இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். மேலும் 2019.9.30இல் நீர்வேலி பூதர்மடம் பகுதியில் கருவி நிறுவனம் 10 பரப்புக் காணியினை கொள்வனவு செய்துள்ளது. இதற்கான சுற்றுமதில் 2022 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

கருவி நிறுவனத்திற்கு NP DAH-7283 என்னும் இலக்கமுடைய வாகனம் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுக்காகவும் நிறுவனத்தின் ஏனைய பயன்பாடுகளுக்காகவும் 2020 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டது.

**நன்றிப் பெருக்கோடு**

கருவி நிறுவனம் 10ஆவது ஆண்டை நிறைவு செய்து 11ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தருணம் கடின உழைப்பும் நேர்மயமான சிந்தனை அணுகு முறைகளும், செயல் ஊக்கமும் இணைந்ததன் வெற்றிப் பெறுபேறுகளை கருவி நிறுவனத்தின் வளர்ச்சிப் படிகளில் நாம் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தருணத்தில் வலு சஞ்சிகை, இராகஸ்ருதி இசைக்குழு, கருவி பட்டிமன்றக்குழு, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகு, சூழல் நேய அலகு ஆகிய செயற்றிட்ட அலகுகளை கருத்துடனும் பொறுப்புடனும் கையாண்டு தொடர்ந்தும் கையாண்டு வருகின்ற இயக்குனர்களுக்கும் உடன் உழைத்தவர்களுக்கும் நன்றியினை உரித்தாக்குகின்றோம்.

நிறுவனத்தின் வளர்ச்சியிலும், இயங்கு நிலையிலும் கொடையாளர்களின் வகிபாகம் காத்திரமானது. அவர்கள் என்றும் கருவியின் நன்றிக்குரியவர்கள் கருவி நிறுவனத்தின் சீரான இயங்கியல் செல்நெறிக்கு பணியாளர்களின் அர்ப்பணிப்பு மிகுந்த சேவை உரமூட்டி வருகின்றது. அவர்களை நாம் நன்றியோடு நெஞ்சிருத்துகின்றோம்.

நிர்வாக சபையில் பங்கேற்று போசகர்களாக இருந்து நிறுவனத்தை ஆற்றுப்படுத்தியும் செயற்படுத்தியும் வருகின்ற அனைத்து உறுப்பினர்களையும் இவ்வேளை நாம் நன்றி பாராட்டுகின்றோம். மொத்தத்தில் கருவி நிறுவனத்தில் வளவாளர்களாக இருந்து கருத்துடன் பங்காற்றிக் கொண்டிருக்கின்ற அனைத்து நல்லுள்ளங்களையும் நன்றிப் பெருக்கோடு மனதிருத்தி இனிவரும் காலங்களிலும் கருவி நிறுவனத்தின் வளர்ச்சியில் எல்லோரது பங்குபற்றுதலும் இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற பணிகளுக்கு அறிவு வளம், அனுபவ வளம் மற்றும் பொருள் வளம் ஆகியவற்றினூடாக பங்களிப்புக்களை வழங்கி வருகின்ற அன்பர்கள், சமூகசேவை ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு எமது சமூகப் பணிகளோடு இணைந்துள்ள ஆலயங்கள், சங்கங்கள், அமைப்புக்கள் ஆகியவற்றிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கருவியின் சமூகப் பணிகளுக்கு இறை கருணையும் சமூகப் பணியாளர்களின் பங்களிப்பும் தொடர்ந்தும் கிட்டும் என நாம் நம்புகின்றோம்.

நன்றி

**கொடையார்களே!**

* கருவி நிறுவனத்தின் வளர்ச்சியில் உங்கள் வகிபாகம் போற்றுதற்குரியது.
* உங்கள் தேவைகளைக் குறைத்து அல்லது ஒறுத்து நீங்கள் வழங்கும் பங்களிப்புக்களே கருவியின் சேவைகள் விசாலிக்கப்படுவதற்கு வழிகோலுகின்றன. உங்களின் இயலுமைக்குட்பட்ட நன்கொடைகளை 82508256 எனும் இலங்கை வங்கிக் கணக்கிலக்கத்தின் மூலம் வழங்கலாம்.
* உங்கள் கருணைக்கரம் எங்கள் வாழ்வின் பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்

## கணக்கறிக்கை (12.6.2013-31.12.2022.)



**திரு. யேசுதாசன் கொன்கிளேடியஸ்**
பொருளாளர்,
கருவி நிறுவனம்.

கருவி நிறுவனத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய வெளிப்படைத் தன்மையோடு பணியாற்றக் கிடைத்ததை நாம் பெரும் பேறாகக் கருதுகின்றோம். சமூக மாந்தர்களின் வழிகாட்டலும் கொடையாளர்களின் பெறுமதி வாய்ந்த பங்களிப்புக்களும் கருவி நிறுவனத்தைப் பலப்படுத்தி வளமான சமூகப்பணி நடை பெறுவதற்கு வகை செய்திருக்கின்றன.

12.6.2013 தொடக்கம் 31.12.2022 வரையான காலப் பகுதியில் கருவி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட சேவைத் திட்டங்களுக்காக செலவீடு செய்யப்பட்ட நிதி நிலை விபரம் இந்தக் குறிப்பில் தரப்படுகின்றது.

2013 தொடக்கம் 2022ம் ஆண்டு வரையான 10 வருட காலப்பகுதியில் எமது பயனாளிகளுக்கு ரூபா 19.09 மில்லியன் பெறுமதியான 5,246 உலர் உணவுப் பொதிகள் மாதம் ஒரு பொதி வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் மாணவர்களுக்கான கல்வியுதவி செயற்றிட்டத்தின் கீழ் ரூபா 3.66 மில்லியன் பெறுமதியான 734 கல்வி உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் 62 பயனாளிகளுக்கு ரூபா 3.44 மில்லியன் பெறுமதியான வாழ்வாதார உதவி வழங்கும் செயற்றிட்டமும், 443 பயனாளிகளுக்கு 1.22 மில்லியன் ரூபா பெறுமதியான அடிப்படை வசதிப்படுத்தல் வழங்கும் செயற்றிட்டமும், 28 பயனாளிகளுக்கு ரூபா 3.63 மில்லியன் பெறுமதியான கடனுதவி வழங்கும் செயற்றிட்டமும், 15 பயனாளிகளுக்கு ரூபா 0.36 மில்லியன் பெறுமதியான மருத்துவ உதவி வழங்கும் செயற்றிட்டமும் குறித்த காலப்பகுதியில் கருவி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டது. இச் செயற்றிட்டங்களுக்காக ரூபா 31.40 மில்லியன் பெறுமதியான நிதி செயற்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுகாலப்பகுதியான 2013 தொடக்கம் 2022 வரையான காலப்பகுதியில் நிறுவனத்தின் சேவைகளுக்கான நன்கொடை, நோக்கம் குறித்த சேவைகளுக்கான நன்கொடை, ஏனைய நன்கொடை, விற்பனை வருமானங்கள், சந்தா வருமானங்கள் மற்றும் ஏனைய வருமானங்கள் ஆகிய செயற்பாடுகளின் மூலம் 138 மில்லியன் ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டது.

இக்காலப்பகுதியில் விற்பனை மற்றும் உற்பத்திக்கான மூலப்பொருட்கள் கொள்வனவு, நிலையான சொத்துக்களின் கொள்வனவு, முதலீட்டு நடவடிக்கைகள், நிர்வாகச் செலவுகள், விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள், நிதிச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் ஆகிய மூலகங்களின் மூலம் 132 மில்லியன் ரூபா நிதி வெளியேற்றத்தைக் காட்டியுள்ளது.

இக்காலப்பகுதியில் முதலீட்டு நடவடிக்கையாக கருவி சேவை அலகிலிருந்து கருவி உற்பத்தி அலகிற்கு ரூபா. 1.2 மில்லியனும் மற்றும் சூழல் நேய அலகிற்கும் ரூபா.2.9 மில்லியனும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

நிலையான சொத்துக்களாக கருவி நிறுவனத்திற்கென 5 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் 2.3 மில்லியன் பெறுமதியான வாகனம் என்பனவும் இக்காலப்பகுதியினுள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

சமூகப்பணிகள் முன்னெடுக்கப்படுவதற்கு ஆளணி வளம் எவ்வளவு தூரம் அவசியமாகிறதோ அதே அளவிற்கு பொருள் ரீதியான பங்களிப்பும் முக்கியம் பெறுகின்றது. கருவி நிறுவனத்தின் சேவைத்திட்டங்கள் அனைத்தும் கொடையாளர்களின் கரங்களினாலேயே பலப்படுத்தப்பட்டவை. கருவி நிறுவனத்தின் நிலைத்தன்மைக்கு நிதி மூலமான பங்களிப்பை நல்குகின்ற அனைவரையும் நாம் நன்றி பாராட்டுகின்றோம். தொடர்ந்தும் உங்கள் பங்களிப்பு கருவி நிறுவனத்தைப் பலப்படுத்தும் என நம்புகின்றோம்.

நன்றி

**சூழலை நேசிப்போம்**

* கருவி நிறுவனம் பழைய கடதாசிகள், பிளாஸ்ரிக் பொருட்கள் ஆகியவற்றை சேகரித்து மீள் சுழற்சிக்கு உட்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.
* உங்கள் வீடுகளிலும், நீங்கள் தொழில் புரியும் இடங்கள் மற்றும் அமைப்புக்களிலும் தேங்கியுள்ள இத்தகைய பொருட்களை எங்களிடம் நீங்கள் வழங்கலாம்.
* கருவி நிறுவனத்தின் சூழல்நேய அலகினூடாக சேவையாற்ற விரும்புகின்ற சூழலியலாளர்களை நாம் வரவேற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்



**திரு. கணபதி சர்வானந்தா**
நிர்வாக சபை உறுப்பினர்
கருவி , சிரேஷ்ட ஊடகவியலாளர்.

## கருவியின் அலகுகள்

கருவி நிறுவனம் புதிய அணுகுமுறைகள் ஊடாக சமூகப்பணி முன்னெடுப்புக்களைச் செய்து வெற்றியடைந்திருக்கின்றது என்பதற்கு வேலைத்திட்டங்கள் அலகுகள் மூலம் பகிரப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருவதை கூறலாம். நிர்வாக அலகு, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகு, சூழல் நேய அலகு, வலு சஞ்சிகை, இராகஸ்ருதி இசைக்குழு, கருவி பட்டிமன்றக்குழு, கருவி அவைக்காற்றுகைக்குழு ஆகிய வகுப்புக்கள் ஊடாக பொருத்தமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நிர்வாக அலகு கருவியின் நிர்வாகத்துறை சார்ந்த செல்நெறிகளோடு தொடர்புபட்டதாகவும் அனைத்து அலகுகளின் பணிகளையும் ஒருங்கிணைப்பதாகவும் அமைந்திருக்கின்றது. நன்கு முறைப்படுத்தப்பட்ட பணிகள் கருவி நிறுவனத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்வதும் நிர்வாக அலகிற்கு உரித்தான பணியாக வகுக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகு முற்று முழுதாக வணிகம் சார்ந்த செயற்றிட்டங்களோடு தொடர்புபட்டது. வலுவிழந்தவர்களை தகைமை வாய்ந்த வணிகம் சார் செயற்பாட்டாளர்களாக இந்த அலகின் மூலம் மாற்றிய நிறைவு கருவி நிறுவனத்திற்கு உண்டு. கருவி Shine திரவ சலவை சவர்க்காரம், கருவி கைகழுவி (Karuvi hand wash) கருவி dish wash ஆகியவற்றை இவ்வலகு உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகின்றது. தேசிய அளவில் உற்பத்தி துறையிலும் சரி சந்தைப்படுத்தல் துறையிலும் சரி கணிசமான தாக்கத்தினை கருவி நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகு ஏற்படுத்தியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலுக்குப் பொருத்தமான செயற்பாடுகளை உள்ளடக்கியதாக சூழல்நேய அலகின் பணிகள் அமைகின்றன. வீடுகளிலும் பொது இடங்களிலும் தேங்கியிருக்கின்ற பழைய கடதாசிகள், பிளாஸ்ரிக் பொருட்கள், இரும்பு போன்ற உலோகங்கள் ஆகியவற்றை சேகரித்து மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் செயற்பாடு இந்த அலகினால் பிரதானமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இயற்கை விவசாயத்தோடு தொடர்புபட்ட பணிகளும் இந்த அலகிற்கு உரித்தானது.

வலுவிழப்புடன் கூடிய நபர்கள் தொடர்பான செய்திகளையும் தகவல்களையும் தாங்கி தமிழில் வெளிவருகின்ற ஓர் சஞ்சிகையாக வலு சஞ்சிகை விளங்குகின்றது. சமூகப்பயன்பாடான விடயங்களினையும் இந்த சஞ்சிகை தன்னுள் அடக்கியிருப்பது சிறப்பான அம்சமாகும்.

இராகஸ்ருதி இசைக்குழு, கருவி பட்டிமன்றக்குழு கருவி அவைக்காற்றுகைக்குழு அனைத்துமே அங்கத்தவர்களின் கலைத்திறனுக்கு களம் அமைத்துக்கொடுக்கின்றன. செயற்றிட்டங்கள் அனைத்தும் திட்ட முகாமையாளர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டு செயல்ப்படுத்தப்பட்டு வருவது பணி இலகுவாக்கலுக்கும் வினைத்திறனான சேவைகள் இடம் பெறுவதற்கும் பேருதவியாய் அமைகின்றது.

**பயனாய் ஒரு பொழுது**

* அங்கத்தவர்களின் பங்களிப்புடன் இராகஸ்ருதி இசைக்குழு, கருவி பட்டிமன்றக்குழு ஆகியவை செயற்பட்டு வருகின்றன.
* உங்கள் இல்ல விழாக்கள், ஆலயத் திருவிழாக்கள், பொது நிகழ்வுகளில் பயன்பாடு மிக்கதும் மகிழ்வூட்டல் சார்ந்ததுமான படைப்புக்களைத் தருவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.
* ஆற்றுகைகள் மூலம் பெறப்படுகின்ற நிதி அங்கத்தவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் – 3

- கருவி சமூகம் – 2023 நிழற்படங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி நிர்வாக சபை - 2023



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## KARUVI (SRDA) - UK அறங்காவலர் சபையினர் கருவி நிர்வாக சபையினருடன் - 2023



## கருவி பணியாளர்கள் சபை - 2023





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 4

- கொடையுள்ளம் பேசுகின்றது...
- என்றும் கருவி வாழும்...
- கருவியின் கருவியாய்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடையுள்ளம் பேசுகின்றது....



**திரு.திருமதி இராசசிங்கம்**
**இராசராணி**
**பிரான்ஸ்**

நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாக்காண 2017ஆம் ஆண்டு யாழில் நின்றபோது, நாம் யாழ் – பருத்தித்துறை வீதி வழியாக பயணித்த தருணம் அங்கு கருவி நிறுவனத்தினர் நின்று நூற்றி நாற்பது ரூபா (ரூ.140) ஒரு சீட்டு வாங்கும்படி வினயமாக கேட்டனர். இச்சீட்டை விற்கும் நோக்கம் என்னவென்று கேட்டபோது தமக்கு இந்நிறுவனத்தை நன்கு கொண்டுசெல்லவும், விரிவாக்கம் செய்யவும் ஒரு சொந்த இடம் தேவை என்றும், கிடைத்துவிட்டால் தாம் அங்கு கட்டிடம் அமைத்து தமது முயற்சியை நல்லபடி கொண்டு செல்ல முடியும் என கூறினர். தாங்கள் தற்போது செய்யும் பணியினையும் மேற்கொண்டு விரிவாக்க எண்ணியவற்றையும் கூட எமக்கு விளக்கினர். இதை உள்வாங்கிய நான் இப்படியாக சிறுகச் சேர்க்கும் பணத்தில் எப்போது உங்களால் காணி வாங்க முடியும் என்று குறும்பாகக் கேட்ட போது வேறு வழி இல்லை. பெருந்தொகைப் பெறுமதியான சீட்டுக்களை எல்லோராலும் வாங்க முடியாது அதனால் தான் சிறுகச்சிறுக நிதியைச் சேர்க்கிறோம் என்று விளக்கிய போது எமக்கும் இவர்களுக்கு எம்மால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டுமென்று மனதில்பட்டது. காணி கிடைத்தால் உங்கள் சுமை குறையுமா? என்று கேட்க, கட்டாயமாக என்றனர். மேலும் இதுவரை அப்படி யாரும் முன்வரவில்லை என்றும் கூறினர். நான் அவர்களிடம் தங்களின் இந்தநலன்புரி நிறுவனம் நன்கு முறைப்படி பதியப்பட்டதா? என்பதை எல்லாம் கேட்டறிந்து கொண்டு நாம் கோயிலுக்குச் சென்றுவிட்டு மீண்டும் வருகிறோம் என்று கூறிவிட்டு விடை பெற்றோம். தெல்லிப்பளையில் இருக்கின்ற எமது பதினெட்டரைப்பரப்பு காணியை இவர்களுக்குக் கொடுக்க எண்ணி முருகப் பெருமானிடம் அனுமதி பெற நின்ற போது அவரின் அருளால் திருப்தியடைந்து ஒரு 15 நிமிட இடைவெளியில் திரும்பி வந்து எமது விருப்பத்தை அவர்களிடம் கூறினோம். அப்போது அவர்கள் சற்றும் எதிர்பாராததால் ஆச்சரியக் குறியுடன் நின்று நாம் கேட்ட பதிவு விபரங்களை எம்மிடம் தந்தனர். நாம் இவைகளைச் சரிபார்த்து விரைவில் ஆவணை செய்து தருவதாகக் கூறிச் சென்றோம்.

மறுநாளே யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் காணிப் பதிவாளர் பகுதியில் மேல் நிலை உத்தியோகத்தராக கடமையிலிருந்த திரு.பிரபாகர் அவர்களிடம் நாம் இப்பதிவைக் கொடுத்து சரிபார்க்கும் படியும் மேலும் எமது தெல்லிப்பளைக்காணி உறுதியையும் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நன்கொடைக்கான விருப்பத்தையும் கூறினோம். அவர் இவற்றை உடனடியாக சரிபார்த்ததோடு மாவட்ட செயலாளர் (Government Agent) அவர்களுடனும் கலந்துரையாடி எம்முயற்சியையும் வாழ்த்தினார். இங்கு திரு. பிரபாகர் அவர்களின் துரித நடவடிக்கைக்கு நன்றி கூறும் கடப்பாடும் எமக்குள்ளது. இதைத் தொடர்ந்து ஓர் இரு நாட்களிலேயே திரு சிவலிங்கம் இளங்கீரன் என்ற பிரசித்தி பெற்ற நொத்தாரிசு மூலம் இக்காணி கொடைக்கான பதிவை ஒழுங்கு செய்யக் கொடுத்தோம்.

இங்கு நடந்த சுவாரஸ்சியமான கலந்துரையாடலும் நினைவு கூரத்தக்கது. அதாவது நொத்தாரிசு அவர்கள் எழுதும் போது உங்களுக்கு பிள்ளைகள் ஒன்றும் இல்லையா என்று கேட்டார். அப்போது இரண்டு பெண்பிள்ளைகளும் பின் இரண்டு ஆண்பிள்ளைகளுமாக நான்கு பிள்ளைகள் உள்ளனர் என்று கூறவும். இப்படி இருந்தும் இவ்வளவு பெருந்தன்மையுடன் நீங்கள் தர்ம சிந்தனையுடன் கொடுக்கும் இச் சொத்திற்கு நானும் என் பங்கிற்கு எழுத்துக் கூலியை இலவசமாக செய்து தருவதாகக் கூறினார். இதுவும் எமக்கு மன நெகிழ்ச்சியாகப்பட்டது. எமது இந்தச் சிந்தனையை மற்றையோரும் ஏற்கின்றார்கள் என்ற எண்ணம் மேலோங்கியது.

மேலும் இவர்களை மாற்றுத் திறனாளிகள் என்று யாரும் குறைவாகக் கணிக்கவில்லை. ஏனெனில் இவர்களது அகக்கண் மிகவும் விசாலமானது. தத்தமது சிறு சிறு இடையூறுகளையும் பொருட்படுத்தாது எமது நாட்டில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாரபட்சமற்ற முறையில் உதவி செய்யும் இவர்களிடம் ஏற்றத்தாழ்வுகளை நான் காணவில்லை. மனிதநேயமுள்ள பெருமைக்குரியவர் களாகத்தான் இவர்களை பார்க்க முடிகிறது.

எமது சிந்தனையும் ஏற்றத்தாழ்வு இல்லாது ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாத களங்கமற்ற மனிதராக வாழவேண்டும் என்பதே. தன்னைக்கண்டு தானம் வழங்கு என்று படித்தோம். எமது தேவைக்கு மீதியதையும் எம்மால் முடிந்ததையும் தானம் செய்யும் எண்ணத்தை தந்த இறைவனுக்கும் நன்றிகள். “கஷ்ரப்பட்டு வாழ்ந்தவர்களே மற்றவர் கஷ்ரங்களையும் நன்கு அறிவர்” என்ற சிந்தனைக்கு இணங்கவே நாமும் பட்டகஷ்ரங்களால் பக்குவப்பட்டோம். அதனாலேயே எம்மால் இந்தக் கொடையைச் செய்ய முடிந்தது. என நாம் நம்புகிறோம். உதாரணமாக கூறுவதாயின் சிறுவயதில் தகப்பனை இழந்த நான் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் கல்வி பயின்ற காலத்தில் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வகுப்பு பிள்ளைகளைப் படிப்பித்தே குடும்பத்தை காக்க இறைவன் வழி செய்தான். பின்னர் கொழும்பில் வேலை செய்யும் போது கூட கொழும்பு இரண்டில் (2இல்) யூனியன் பிளேசில் (Union Place) இருந்த பிரத்தியேக தனியார் பாடசாலையில் வசதியற்ற பிள்ளைகளுக்கு J.S.C யிலிருந்து S.S.C வரை உள்ளவர்களுக்கு மாலை நேரங்களில் இலவசமாக கணிதம் படிப்பிப்பது போன்ற என்னால் ஆன உதவிகளை செய்யும் வழக்கம் இருந்தது. இவற்றிற்கு மூலகாரணம் எனது இறை நம்பிக்கையே. அதுவே இன்றும் தொடர்கிறது. எமது முயற்சியுடனும் இறைவனின் கருணையுடனுமே முன்னேறிய எனக்கு மற்றையோர்க்கு உதவி செய்வதும் என்கடனே என்ற கருத்து வேதவாக்காகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரக மந்திரமாகியது. இறைக்கும் கிணற்றிலேயே நல்லூற்றைப் பெற முடியும். ஆகவே தர்மம் செய்வதால் எதுவும் இழக்கப் போவது இல்லை. "காதற்ற ஊசியும் வாராது காண் உன் கடை வழிக்கே" என்று உணர்த்திய பட்டினத்தடிகளின் கூற்றை ஏற்று வாழ்கின்றோம்.

ஆதலால் தான் கருவி நிறுவனத்திற்கு உதவி தேவைப்படும் போது உணர்ந்து நானும் மனைவியுமாக நல்லெண்ணத்துடன் இக்காணியை அவர்களுக்கு முழுமனதுடன் கொடுத்தோம். இன்னும் சொல்வதாயின் இறைவன் கருணை உடனேயே எமது உழைப்பு இருந்ததால் இன்றும் இறைவனேதான் எம்மிலிருந்து இவற்றைச் செய்விக்கிறார். இதுவே உண்மை. இதில் நானும் மனைவியும் இச்செயலில் கருவிகளாகத் தான் உள்ளோம். செயல்பட்டோம்.

நன்றி

**மாதம் ஒரு பொதி**

* மாதம் ஒரு பொதி எனும் செயற்றிட்டத்தினூடாக கருவி அங்கத்தவர்களுக்கு மாதாந்தம் உலர்உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
* வலுவிழப்பின் அதீத பாதிப்புக்குள்ளானவர்களும் தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளவர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர்.
* நிலத்திலும் புலத்திலும் வாழும் உறவுகள் தங்களதும் தங்கள் குடும்பம் சார்ந்தவர்களிதும் பிறந்த நாட்கள், திருமண நாட்கள் போன்ற நிகழ்வுகளில் இத்திட்டத்தின் ஊடாக கருவி அங்கத்தவர்களுக்கு உதவிகளினை வழங்கி வருகின்றனர்.
* அமரத்துவம் அடைந்த குடும்ப உறவுகளின் ஞாபகார்த்த தினங்களிலும் கூட அவர்களது குடும்பத்தினர், நண்பர்கள் இச்செயற்றிட்டத்தில் இணைந்து பங்களிப்புச் செய்கின்றனர்.
* தற்போது ரூபா 5000 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்படுகின்றன.
* அன்பர்கள் தங்கள் இயலுமைக்கு உட்பட்ட வகையில் பயனாளிகளுக்கான உதவிகளை வழங்கி வருகின்றனர்.
* நீங்களும் இச்செயற்றிட்டத்தினூடாக பங்களிப்புக்களை வழங்கலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்

## என்றும் கருவி வாழும்...



திரு.கிருஸ்ணசாமி ஜங்கரன்
நலச்சேவை இணைப்பாளர்
கருவி
உதவி விரிவுரையாளர்
ஆசிரியர் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்.

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் ஒரு தசாப்தத்தைத் தொடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. கருவியோடு இணைந்து ஒரு நலச்சேவை இணைப்பாளராக எமது சமூகத்திற்கு பணியாற்றக் கிடைத்தமை குறிப்பாக மாற்றுத் திறனாளிகளுக்கு உதவ முடிவதைப் பெரும்பேறாகவே கருதுகின்றேன்.

கருவி என்பது மாற்றுத்திறனாளிகளால் மாற்றுத் திறனாளிகளுக்கு எல்லா வகையிலும் உதவுகின்ற ஒரு நிறுவனம். எமது மக்கள் மத்தியில் இதுவே இத்தகைய முதல் அமைப்பாகும். கருவியின் செயற்பாடுகள் உண்மையும் நேர்மையுமாக வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எங்களால் முடிந்தவற்றையும் ஏன்? முடியாதவற்றையும் கூட எம் மக்களுக்காக எந்தவித எதிர்பார்ப்புகளும் இன்றி ஆற்றுவதற்கான ஒரு சமூகப்பணிக்களமாக கருவி இருப்பது மிகுந்த பெருமைக்குரிய விடயம் ஆகும். இதுவே ஏனைய அமைப்புக்களிடமிருந்து கருவி தனக்கென தனித்த அடையாளம் கொள்வதற்கும் நான் அந்நிறுவனத்தோடு இணைந்து செயற்படுவதற்கும் பிரதான காரணமாகும்.

கருவியின் செயற்பாடுகளால் நீடித்த நிரந்தர நல்வாழ்வு பெற்ற பலமாற்றுத்திறனாளிகள் இருக்கின்றனர். இதுவே கருவியின் சாதனையும் வெற்றியும் ஆகும். கருவி நிறுவனம் எந்தவிதமான பிரபலங்களின் அடையாளப்படுத்தல்களும் இல்லாமல் மிகச்சாதாரணமானவர்களால் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவது சிறப்பம்சம் ஆகும். கருவி பல மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் நல்லவிதமான மாற்றங்களை மிகப்பெரிய அளவில் ஏற்படுத்தியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவி கடந்துவந்த பாதை கரடுமுரடானது தான். ஆனாலும் கருவியின் தலைமையும் அதனோடு இணைந்து செயற்படும் நிர்வாக சபையும் குறிப்பாக, அங்கத்தவர்களும் கருவியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையோடும் அர்ப்பணிப்போடும் 'சுயநலமில்லாமலும்' செயற்படுவது சாலச்சிறந்தது.

கடந்த பத்து ஆண்டுகளில் மாற்றுத்திறனாளிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை ஒரு நிறுவனமயப்படுத்தி அதை வெற்றிகரமான ஒரு வியாபாரமாகவும் கருவி மாற்றியிருக்கின்றது. இதுவே கருவியின் தொலைநோக்குச் சிந்தனைக்கும் ஸ்திரத்தன்மைக்கும் நீடித்த வளர்ச்சிக்கும் உரிய சான்று.

நாம் எமக்குரிய எல்லா வகையான சமூகப்பணிகளையும் செய்வதற்கு கருவி களமாக இருக்கின்றது. இந்தக் களத்தில் இணைந்து உங்கள் ஒவ்வொருவருடைய சமூகக் கடமையையும் நிறைவேற்ற உங்கள் ஒவ்வொருவரையும் பேரன்புடன் அழைக்கின்றேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட குடும்ப கடமைகள் இருப்பது போல மாற்றுத்திறனாளிகளையும் அவர்கள் வாழ்வில் ஒளியேற்றிவிட வேண்டிய சமூகக் கடமையும் உங்களுக்கு உள்ளது என்ற எண்ணத்தையும் உங்கள் மனங்களில் நிரப்பி உங்கள் பிள்ளைகளின் மனங்களிலும் அதனைக் கடத்துவீர்கள் என்று நம்புகின்றேன்.
"காலங்களை வென்று என்றும் கருவி வாழும்"

நன்றி




**கருவி Shine திரவ சலவை சவர்க்காரம்**

* தரமான உற்பத்தி.
* ஆடைகளின் தரத்தில் பாதிப்பை ஏற்படுத்தாத வண்ணம் அதிலுள்ள கறைகளை இலகுவில் நீக்கும்.
* நறுமணம் மிக்கது.
* சாதாரண மற்றும் இயந்திர சலவைக்கு உகந்தது.
* பக்க விளைவுகள் அற்றது.
* இதன் மூலம் கிடைக்கும் இலாபம் மாற்றுத்திறனாளிகள் வாழ்வாதாரத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருவியின் கருவியாய்...

**திரு.கனகலிங்கம் சோமசேகரம்**
பொறிமுறை எந்திரவியல்
தொழில்நுட்ப ஆலோசகர்
கருவி நிறுவனம்
ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது அங்கங்களை இழந்த போதும் தாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க வேண்டும் என்கின்ற நல்லெண்ணத்தோடு உருவாக்கப்பட்ட கருவி நிறுவனத்தின் பணிகளின்பால் நான் ஈர்க்கப்பட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அறிவு என்பது பகிரப்படுகின்ற பொழுதே முழுமை பெறுகின்றது. கருவி நிறுவனத்தின் மூலம் எனது அறிவையும் அனுபவத்தையும் பகிரக்கிடைத்ததை பெரும் சந்தர்ப்பமாக நான் உணர்கின்றேன்.

தற்போது உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகு, சூழல் நேய அலகு ஆகியவற்றின் மூலமாக அங்கத்தவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த அலகுகளில் பயன்பாட்டிலுள்ள இயந்திரங்களை வடிவமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கும், துறை சார்ந்த வளவாளர்களை இணைப்புச் செய்வதற்கும் கிடைத்த வாய்ப்பை நான் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

வலுவிழந்த நபர்கள் புதிய பல கோணங்களில் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியும் என்பதற்கான வெளிப்பாடுகளை கருவி நிறவனத்தின் தொழில் சார்ந்த முயற்சிகள் கட்டியம் கூறி நிற்கின்றன. இதற்கு கருவி **Shine** திரவ சலவை சவர்க்கார உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் சிறந்த சான்றாகின்றது.

நாம் கருவியின் கருவியாய் தொடர்ந்தும் எமது அறிவு வளம், அனுபவ வளம், பொருள் வளம் ஆகியவற்றின் மூலம் பணிசெய்வோம். இந்த எண்ணமும் எமது சக்திக்குட்பட்டதான செயல்களும் எம்மையும் பிறரையும் நிறைவாக்கும் என நான் நம்புகின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 5

- கருவி நிகழ்வுகளின் நிழல் தசாப்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதார உதவிகள், தொழில் பயிற்சிகள் வழங்கல்




கால்நடை (மாடுகள்) வழங்கல்




கால்நடை (ஆடுகள்) வழங்கல்




கடைக்கான பொருட்கள் வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பழரச உற்பத்திப் பொருட்கள் வழங்கல்



கடற்றொழிலிற்கான (வலை) உதவி வழங்கல்




தையல் இயந்திரம் வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போட்டோக் கொப்பி இயந்திரம் வழங்கல்




விற்பனை வண்டி வழங்கல்



கருவி சந்தைப்படுத்தல் பணியாளர் ஒருவருக்கு கருவி உற்பத்திப் பொருட்கள் வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுயதொழிலுக்கான கடனுதவி வழங்கல்




முற்சக்கர வண்டிக் கொள்வனவிற்காக காசோலை வழங்கல்




கதிரைகள் பின்னுவதற்கான வயர்கள் வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாக்குச் சீவல் விற்பனையாளர் ஒருவருக்கான மூலப் பொருள் வழங்கல்



கடதாசிப் பை தயாரிப்பதற்கான பயிற்சி வழங்கல்



தையல் பயிற்சி வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கத்தவர்களுக்கான அடிப்படை வசதிப்படுத்தல்கள் , அணுகு வசதிப்படுத்தல்கள் வழங்கல்



குழாய் கிணறு, நீர்த்தொட்டி அமைத்துக் கொடுத்தல்




நீர்த்தாங்கி வழங்கல்






நீர் இறைக்கும் இயந்திரம், உபகரணங்கள் வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆடை வழங்கல்




மழைக்கவசம் வழங்கல்



நுளம்பு வலை வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக்கர நாற்காலி வழங்கல்


ஊன்று கருவி வழங்கல்



வெள்ளைப் பிரம்பு வழங்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதம் ஒரு பொதி வழங்கல்...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி உதவிகள் வழங்கல்...



கற்றல் உபகரணங்கள் வழங்கல்



துவிச்சக்கர வண்டி வழங்கல்



புத்தகப்பை வழங்கல்

கல்வி நிதி வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு விழா...




2016




2017




2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2019




2020



2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத்திறனாளிகள் தினம்...



2014




2015




2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2017




2018




2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்கள், பண்டிகைகள்...



தைப்பொங்கல்



சித்திர வருடப்பிறப்பு கைவிசேடம் வழங்கல்



வாணி விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒளிவிழா




ஓவியக் கண்காட்சி




நூல் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராக ஸ்ருதி இசை ஆற்றுகை...




கருவி இராக ஸ்ருதி இசை ஆற்றுகை




கருவி இராக ஸ்ருதி இசை ஆற்றுகை




கருவி பட்டிமன்ற ஆற்றுகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனக் கௌரவிப்பு...





சுவாபிமானி விருது



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் கருவி நிறுவனத்தை கௌரவித்த போது



கலாசார திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் கருவி நிறுவனம் 2 ஆம் இடத்தைப் பெற்றபோது



கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட மெல்லிசைப் போட்டியில் கருவி நிறுவனம் 2ஆம் இடத்தினைப் பெற்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி நிறுவனத்திற்கான அடிக்கல் நாட்டுதல்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிப்புக்கள், காட்சிக்கூடங்கள்




2017



2017





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூகத்துக்குச் சிறப்பான சேவையாற்றும் அமைப்பான விண்மீன்கள் அமைப்பைக் கௌரவித்த போது




மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி கருவியினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவி ஒருவர்




பொதுமக்களிடையே நடாத்தப்பட்ட போட்டியின் வெற்றியாளர் ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ முகாம், ஆன்மிக ஆற்றுப்படுத்தல்கள்...


கருவியில் நடைபெற்ற மருத்துவமுகாம்


பஜனை



யோகாசனப் பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி பூதர்மடத்திலுள்ள கருவியின் காணி



## தெல்லிப்பளை தந்தை செல்வாபுரத்திலுள்ள கருவியின் காணி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவிக்கான நிரந்தர அமைவிடத்தை நோக்கி...



- அங்கத்தவர்களுக்கு ஏற்ற, அணுகு வசதிகளுடன் கூடிய வகையில் நிறுவனக் கட்டடத்தை அமைத்தல்.

- அனைத்து நடவடிக்கைகளையும் ஒரு கூரையின் கீழ் கொண்டு வருதல்.

- அங்கத்தவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதுடன் விவசாயம் மற்றும் தொழில் முயற்சிகள் போன்றவற்றில் இவர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு ஏதுவான முறையில் சகல வசதிகளையும் கொண்ட பயிற்சிக் கூடங்களை அமைத்தல்.

- கட்டட வடிவமைப்பின்படி கட்டடத்தைக் கட்டி முடிக்க ரூபா 35 மில்லியன் (மூன்றரைக் கோடி) தேவைப்படுமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

- குறித்த செயற்றிட்டம் வெற்றிபெற தங்களால் முடிந்தளவு பங்களிப்பை வழங்கி உதவுமாறு தங்களிடம் வேண்டி நிற்கின்றோம்.







New Evergreen Printers (Pvt) Ltd, Jaffna. Tel : 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org